# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No. 76/2020

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. மருதுராஜ் | **Rw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். நான் விபத்து சமயத்தில் ஜாஸ்மின் டயர் புரோடக்ட்ஸ் நிறுவனத்தில் மினி லாரி ஓட்டுநராக பணிபுரிந்துவந்தேன். கடந்த 09.10.2019 ம் தேதி காலை 09.20 மணிக்கு சுரண்டையிலிருந்து சாம்பவர் வடகரை செல்லும்வழியில் சுந்தரபாண்டியபுரம் விலக்கு அருகே விபத்து நடந்தது. நான் கிழக்கு திசையிலிருந்து மேற்கு திசை நோக்கி வாகனத்தில் சென்றுகொண்டிருந்தேன். அப்போது நான் இன்டிகேட்டர் போட்டு தெற்கு திசையை நோக்கி இடது பக்கமாக திரும்பினேன். அப்போது இருசக்கர வாகனத்தில் எனக்கு பின்னால் வந்த மாணிக்கராஜ் என்பவர் கவனக்குறைவாக நான் ஓட்டிவந்த மினிலாரியின்

மீதுமோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். காயம்பட்டு கீழே விழுந்துகிடந்த அவரை நான் தண்ணீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தி ஆம்புலன்ஸ் வரவழைத்து அவரை சிகிச்சைக்கு அனுப்பினேன். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் தலைக்கவசம் அணியாமல் வந்தார். இருசக்கர வாகனம் ஓட்டிய நபர் உரிய இடைவெளி விட்டு வாகனத்தை ஓட்டிவந்திருந்தால் மேற்படி விபத்து ஏற்படாமல் தவிர்த்திருக்க முடியும். விபத்து சமயத்தில் மாணிக்கராஜை தவிர்த்து வேறுயாரும் அவருடன் வரவில்லை, வேறு வாகனத்திலும் உடன் வரவில்லை.

விபத்து நடந்த இடத்தை போலீசார் ஆய்வு செய்து தயார் செய்த மாதிரி வரைபடம் தான் என்னிடம் காட்டப்படுவது. அது **எ.ம.சா.ஆ.1** ஆகும். (மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த மாணிக்கராஜின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்துசம்பந்தமாக முதல் தகவல் அறிக்கையும், இறுதி அறிக்கையும் என் மீதுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த மனுவில் நான் ஆஜராகி எனது தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஜாஸ்மின் டயர் புரோடக்ட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதைக்காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் விபத்தானது, சுந்தரபாண்டியபுரம் விலக்கிற்கு சுமார் 20 அடி தூரம் கிழக்கே நடந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விபத்துசமயத்தில் வாகனத்தை மெதுவாகத்தான் ஓட்டிவந்தேன், அது நான் வழக்கமாக செல்லும் பாதை என்பதால் அது எனக்கு பரிட்சையமான பாதையாகும். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த மாணிக்கராஜ் தலைக்கவசம் அணிந்திருந்தார் என்றும், விபத்தின் காரணமாக கழன்று விழுந்துவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் மாணிக்கராஜீடன் வேறுயாரும் உறவினர்கள் வந்துள்ளார்களா என்பதை நான் அந்த சமயத்தில் இறங்கி விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், ஆனால் யாரும் வரவில்லை.

என் மீது பதிவுசெய்யப்பட்ட வழக்கினை எதிர்த்து நான் ஏதேனும் மேல்நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் விபத்து சமயத்தில் வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டிவந்தேன் என்றும், பின்னால் வந்த இருசக்கர வாகன ஓட்டுநர் நிதானமாக

போக்குவரத்துவிதிகளை கடைபிடித்து வந்தார் என்றும் விபத்திற்கு நான்தான் முழு பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல. என் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தவறானது என நான் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது தவறு உள்ள காரணத்தினால்தான் இந்த மனுவில் நான் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றும், மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தற்போது காப்பீட்டு கழகத்தின் வேண்டுகோளுக்கேற்ப நீதிமன்றத்தில் ஆஜராகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் ஊர்ஜிதத்தில் இருந்தது. எங்கள் லாரியின் காப்பீட்டுக்கழகம் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi